செய்தி வெளியீடு எண்: 646 நாள்:25.08.2021

**செய்தி வெளியீடு**

**மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.V செந்தில்பாலாஜி அவர்கள் தலைமையிலும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்களின் முன்னிலையிலும், சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்ட மன்ற உறுப்பினர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் புதிய வளைய சுற்றுத்தர அமைப்பு (RMU) மற்றும் புதிய மின்மாற்றியை திறந்துவைத்தார்கள்**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.V செந்தில்பாலாஜி அவர்கள் தலைமையிலும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் முன்னிலையிலும், சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி சட்ட மன்ற உறுப்பினர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் புதிய வளைய சுற்றுத் தர அமைப்பு (RMU) மற்றும் புதிய மின்மாற்றியை நீல கடற்கரை சாலை, நீலாங்கரையில் இன்று (25.08.2021) பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்துவைத்தார்கள். சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. ச. அரவிந்த் ரமேஷ், இயக்குநர் மின் பகிர்மானம் திரு. மா. சிவலிங்கராஜன் மற்றும் உயர் அலுவலர்கள் உடன் கலந்து கொண்டனர்.

கடந்த 2015 முதல் இயற்கை சீற்றங்கள் தொடர்ந்து அதிகம் பாதிப்புக்குள்ளான நீலாங்கரையில் முதற்கட்டமாக 15 கி.மீ மின்புதைவடம் (Cable) வளைய சுற்றுத் தர அமைப்பு (RMU), 70 மின் பெட்டிகள் (Pillar) அமைக்கும் பணிகள் ரூபாய் 3.5 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு இன்று பொது மக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 34,500 மின் இணைப்பு நுகர்வோர்கள் பயன் பெறுவர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**